நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 14.06.2022

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2022ம் வருடம் ஜுன் மாதம் 21ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>21.06.2022</td><td>92</td><td>
<u>பொருள் எண். 01</u><br>
களக்காடு நகராட்சியில் 04/2022 மற்றும் 05/2022 ஆகிய மாதங்களில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளை பதிவு செய்ததை பார்வையிட்டு அங்கீகரிக்க வேண்டியது.
<table>
<tr><th rowspan="2">.வ. எண்.</th><th rowspan="2">மாதம்</th><th colspan="3">பிறப்பு</th><th colspan="3">இறப்பு</th><th colspan="3">இறந்து பிறந்தவை</th></tr>
<tr><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>ஏப்ரல்</td><td>47</td><td>73</td><td>120</td><td>10</td><td>5</td><td>15</td><td>0</td><td>0</td><td>0</td></tr>
<tr><td>2</td><td>மே</td><td>46</td><td>44</td><td>90</td><td>13</td><td>19</td><td>32</td><td>0</td><td>0</td><td>0</td></tr>
</table>
</td><td>பார்வையிடப் பட்டது.</td></tr>
<tr><td>21.06.2022</td><td>93</td><td>
<u>பொருள் எண். 02</u><br>
களக்காடு நகராட்சி 14வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து கீழ்கண்ட பணிகள் செய்ய கடிதம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு அங்கீகாரத்திற்கும்.
<table>
<tr><td>1.</td><td>மூங்கிலடி நாடார் வடக்கு தெருவில் வாறுகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>2.</td><td>அரிஜன் வடக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>3.</td><td>வெப்பல் நடுத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>4.</td><td>அஞ்சுகிராமம் சுடுகாடு செல்லும் பாதையில் சிறிய பாலம் அமைத்தல்.</td></tr>
</table>
</td><td>அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td>21.06.2022</td><td>94</td><td><u>பொருள் எண். 03</u><br>களக்காடு நகராட்சி 18வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து ஜவஹர் தெருவில் உள்ள வாறுகால் ரோடு மட்டத்தை விட தாழ்வாக உள்ளதால் அதை உயர்த்தி தர கேட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு அங்கீகாரத்திற்கும்.</td><td>அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>21.06.2022</td><td>95</td><td><u>பொருள் எண். 04</u><br>களக்காடு நகராட்சி பகுதியில் பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அப்புறப்படுத்த 19வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.</td><td>அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>21.06.2022</td><td>96</td><td><u>பொருள் எண். 05</u><br>களக்காடு நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் பணி செய்ய சென்னை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 20543/2021/P2, நாள். 29.04.2022ன் படி கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி பெற்று, மதிப்பீட்டிற்கு முதன்மை பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று, 26.05.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு ( ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>களக்காடு நகராட்சி, புல எண். 293, சிதம்பராபுரம் மெயின் ரோடு மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை (LPG Gasifier Crematorium) அமைக்கும் பணி.</td><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td>145.00</td><td>4.70% அதிகம்</td></tr>
</table></td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக் குறிப்பு :**<br><br>மேற்கண்ட பணிகளுக்கு 26.05.2022 அன்று நான்கு டெண்டர்கள் பெற்று நகராட்சி பொறியாளர் அவர்களால் ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டதில், **திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்** என்பவர் மட்டுமே தகுதி பெற்றுள்ளார். அன்னாரது ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்து வேலைக்கான உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 21.06.2022 | 97 | **பொருள் எண். 06**<br><br>களக்காடு நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் 2 வாகனங்களுக்கான தரச்சான்று 07/2022ம் மாதத்துடன் முடிவடைவதால், தொடர்ந்து வட்டார போக்குவரத்து அலுவலர், வள்ளியூர் அவர்களின் தரச்சான்று பெற வேண்டியுள்ளதால், அதன்படி பொது சுகாதார வாகனங்களில் (TN72Q7238 மற்றும் TN72AU3639) உள்ள பழுதை சரி செய்து தரக் கேட்டு சுகாதார ஆய்வாளரின் அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>**அலுவலகக்குறிப்பு :**<br><br>பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் 2 வாகனங்களுக்கு தரச்சான்று பெற வேண்டியுள்ளதால், வாகனங்களில் உள்ள பழுதினை சரிசெய்வதற்கும், அதற்காகும் செலவினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | பொது சுகாதார வாகனங்கள் TN72Q7238 மற்றும் TN72AU3639-ஐ பழுது நீக்கம் செய்ய அனுமதிக்கப் பட்டது. |
| 21.06.2022 | 98 | **பொருள் எண். 07**<br><br>களக்காடு நகராட்சி பகுதி மூங்கிலடி ஊரில் அமைந்துள்ள நான்குனேரியான் கால்வாயில் கட்டப்பட்டுள்ள பாலத்தில் தடுப்புசுவர் அமைக்க நான்குனேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரூபி. R. மனோகரன் அவர்களின் தொகுதி வளர்ச்சி நிதி 2021-2022ம் ஆண்டுக்கு ரூ. 5.00/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு கேட்டு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண். அ8/347/2022, நாள். 13.05.2022ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும். | பார்வையிட்டு அனுமதிக்கப் பட்டது. |
| 21.06.2022 | 99 | **பொருள் எண். 08**<br><br>களக்காடு நகராட்சி அலுவலகம் எதிரில் நிழற்குடை அமைக்க (தெப்பக்குளம் தெற்கு பகுதியில்) பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஞானதிரவியம் | பார்வையிட்டு அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>அவர்களின் தொகுதி வளர்ச்சி நிதி 2022-2023ம் ஆண்டுக்கு ரூ. 7.00/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு கேட்டு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண். அ6/2449/2022, நாள். 26.05.2022ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>21.06.2022</td>
<td>100</td>
<td>
<u>பொருள் எண். 09</u>
களக்காடு நகராட்சி பகுதி பொதுமக்களின் நலன் கருதி பொதுநிதி 2022-2023ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண். 5, கீழக்கருவேலன்குளம் மேற்கு தெரு, வார்டு எண். 7, கீழக்கருவேலன்குளம் பள்ளிக்கூடத்தெரு கலையரங்கம் அருகில், வார்டு எண். 22, தோப்பு தெரு மற்றும் வார்டு எண். 12, அம்மன் சன்னதி தெரு ஆகிய தெருக்களில் சின்டெக்ஸ் டேங்க் பழுது சரி செய்தல்.</td><td>1.48</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 2, மஞ்சுவிளை மற்றும் வார்டு எண். 13, மூங்கிலடி ஆகிய தெருக்களில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்துதல்.</td><td>1.27</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண். 25, சிதம்பராபுரம் நெச்சடி அம்மன் கோவில் கிணறு முதல் பாண்டியாபுரம் தெற்கு தெரு வரை பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல்.</td><td>0.60</td></tr>
<tr><td>4.</td><td>வார்டு எண். 17, கலுங்கடி மெயின் ரோடு பாலத்தின் அருகில் வடிகால் அமைத்தல்.</td><td>0.69</td></tr>
<tr><td>5.</td><td>வார்டு எண். 8, நாகன்குளம் கீழத்தெருவில் உள்ள பழுதடைந்த பாலத்தை புதுப்பித்தல்.</td><td>0.60</td></tr>
<tr><td>6.</td><td>வார்டு எண். 20, பஸ்ஸ்டாண்டு கீழத்தெருவில் கழிவுநீர் வடிகால் கட்டுதல்.</td><td>1.04</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :
பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் ஆதாரம், பொது சுகாதார கழிவுநீர் வடிகால் மற்றும் பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அகற்றுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. உரிய ஒப்பந்தப்புள்ளி பெற்று வேலைக்கான பணி உத்தரவு வழங்கிடவும், அதற்கான செலவினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>21.06.2022</td>
<td>101</td>
<td>

**<u>பொருள் எண். 10</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண். 23, நாள். 07.04.2022ன்படி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நகராட்சிகளுக்கு அரசின் சிறப்பு நிதி தலா ரூ. 2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதில் தற்போது ரூ. 50.00 இலட்சத்தில் கூடுதலாக நகராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 7628/2022/MA1, நாள். 08.06.2022ன்படி பணிகள் தேர்வு செய்து முன்மொழிவினை அனுப்பி வைக்க கேட்டு வரப்பெற்ற கடிதத்தின்படி, தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கும் அனுமதிக்கும்.

**<u>தேர்வு செய்யப்பட்ட பணிகள் விபரம்</u>**

<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண். 1, ஆசாத்புரம் தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் கலுங்கடி அரிசன் தெருவில் பாலம் அமைத்தல்.</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 2, மஞ்சுவிளை தெற்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண். 3, மஞ்சுவிளை காமராஜர் தெருவில் பேவர் பிளாக் அமைத்தல்.</td></tr>
<tr><td>4.</td><td>வார்டு எண். 4, கீழப்பத்தை வடக்கு தெரு1ம் சந்து பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>5.</td><td>வார்டு எண். 5, மேலக்கருவேலன்குளம் நடுத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>6.</td><td>வார்டு எண். 6, காட்டுநாயக்கன் தெருவில் வாறுகால் அமைத்தல்.</td></tr>
<tr><td>7.</td><td>வார்டு எண். 7, கீழக்கருவேலன்குளம் பள்ளிக்கூடத்தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் பாலம் அமைத்தல்.</td></tr>
<tr><td>8.</td><td>வார்டு எண். 8, மேலக்கருவேலன்குளம் சிவருத்திரர் தெருவில் போர் அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.</td></tr>
<tr><td>9.</td><td>வார்டு எண். 9, சிங்கம்பத்து முஸ்லீம் தெற்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td></tr>
<tr><td>10.</td><td>வார்டு எண். 10, கொம்புக்காரன் அரிசன் தெருவில் பேவர் பிளாக் மற்றும் வாறுகால் அமைத்தல்.</td></tr>
<tr><td>11.</td><td>வார்டு எண். 11, காந்திஜி தெருவில் பாலம் அமைத்தல்.</td></tr>
<tr><td>12.</td><td>வார்டு எண். 12, ஆவுடைவிலாசம் தெருவில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.</td></tr>
<tr><td>13.</td><td>வார்டு எண். 13, கக்கன்நகர் அம்மன் கோவில் முன்பு பாலம் அமைத்தல்.</td></tr>
</table>

</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 14. வார்டு எண். 14, மூங்கிலடி சுடுகாடு சாலை மற்றும் பாலம் அமைத்தல்.<br>15. வார்டு எண். 15, புதுத்தெருவில் குட்டை கோபுர விளக்கு அமைத்தல்.<br>16. வார்டு எண். 16, ஞானசம்பந்தபுரம் 3ம் சந்து பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>17. வார்டு எண். 17, காந்திவீதி, சேனையர் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>18. வார்டு எண். 18, விஸ்வகர்மா தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>19. வார்டு எண். 19, மணிக்கூண்டிலிருந்து சேனையர் தெருவரை வாறுகால் மட்டத்தை உயர்த்துதல்.<br>20. வார்டு எண். 20, பஸ்ஸ்டாண்டு கீழத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>21. வார்டு எண். 21, கோவில்பத்து குண்டுத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>22. வார்டு எண். 22, தோப்புத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>23. வார்டு எண். 23, சிதம்பரபுரம் T.D.T.A. பள்ளி முன்பு பேவர் பிளாக் சாலை அமைத்தல்.<br>24. வார்டு எண். 24, சிதம்பரபுரம் இளவன் கிணறு தூர்வாறுதல் மற்றும் பைப் லைன் அமைத்தல்.<br>25. வார்டு எண். 25, சிதம்பரபுரம் தெற்கு ரதவீதி, கீழரதவீதி வாறுகால் மட்டத்தை உயர்த்துதல்.<br>26. வார்டு எண். 26, கோவில்பத்து செட்டியார் தெருவில் பாலம் அமைத்தல்.<br>27. வார்டு எண். 27, கோவில்பத்து யாதவர் தெற்கு தெருவில் புதிய ஆழ்துளை அமைத்து சின்டெக்ஸ் டேங்க் மற்றும் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றை புதுப்பித்தல்.<br>28. வடகரை நீரேற்று நிலையத்தில் காம்பவுண்ட் சுவர் அமைத்தல். | |
| 21.06.2022 | 102 | **பொருள் எண். 11**<br>மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2022-2023ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடர் நகராட்சி நிர்வாகத் துறை மான்ய கோரிக்கை அறிவிப்பு எண். 23, நாள். 07.04.2022ன்படி பணிகள் செய்வதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் களக்காடு நகராட்சி பகுதியில் கீழ்கண்ட பணிகளை செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>1. களக்காடு நகராட்சி பேருந்து நிலையத்தினை புதுப்பித்தல் மற்றும் கூடுதல் வணிக வளாக கடைகள் அமைத்தல்.<br>2. நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல். | அனுமதிக்கப் பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. | மாணிக்கன்குளம் தூர்வாறுதல் மற்றும் நடைபாதை அமைத்தல். | |
| | | 4. | கசடு கழிவு மேலாண்மை திட்டம். | |
| | | 5. | வார்டு எண். 7, கீழக்கருவேலன்குளத்தில் சமுதாய கழிப்பிடம் மற்றும் வார்டு எண். 22, அந்தோணியார் தெரு ஆற்றங்கரை அருகில் பொது கழிப்பிடம் கட்டுதல். | |
| | | 6. | வார்டு எண். 11, சுபத்ரா பூங்கா மற்றும் வார்டு எண். 26, கோவில்பத்து ஜின்னா பூங்கா மேம்படுத்துதல். | |
| | | 7. | மண்சாலையினை தார்சாலையாக மாற்றுதல். வார்டு எண். 13, கப்பலோட்டிய தமிழன் தெரு மற்றும் மூங்கிலடி காமராஜர் தெரு தார்சாலை அமைத்தல். | |